**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**29 ஏப்ரல் 2016 / 21 ரஜப் 1437**

# அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்தில் பணிவுடன் நடந்து கொள்வது

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது கலீஃபா செய்யிதினா உமர் பின் அல்-கத்தாப் (ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில், கலீஃபா அவர்கள் தனது கண்காணிப்பின் கீழ் இருந்த நகரத்தையும் அதில் வசிப்பவர்களையும் சுற்றிப் பார்த்து வலம் வந்து கொண்டிருந்த போது, ஒரு வீட்டின் பக்கமாக கடந்து சென்றார்கள். அவ்வீட்டில், திருக்குர்ஆனின் ''அத்தூர்'' எனும் அத்தியாயத்தின் பின்வரும் 7-8 வரையிலான வசனங்கள் ஓதப்படுவதைக் கேட்டார்கள்:

إِنَّ عَذَابَ رَبِّكَ لَوَاقِعٌ ﴿٧﴾ مَا لَهُ مِن دَافِعٍ ﴿٨﴾

பொருள்: நிச்சயமாக உம்முடைய இறைவன் (விதித்திருக்கும்) வேதனை சம்பவிக்கும். அதனைத் தடுப்பவர் எவருமில்லை.

மேற்கண்ட வசனம், செய்யிதினா உமர் (ரலி) அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அவர்களின் முழங்கால்கள் பலஹீனமாகி அப்படியே நின்று விட்டார்கள். தரையில் விழுந்து அழுது புலம்பினார்கள். பின்பு மற்றவர்களின் உதவியோடு அவர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படும் நிலை ஏற்பட்டது.

ஜமாஅத்தார்களே!

ஒரு உறுதியான தலைவரை இந்த அளவு கவலையில் ஆழ்த்திய விஷயம் என்ன? எனச் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் சக்திக்கு முன்பாக, தான் மிகச் சிறியவன் என அவர்கள் உணர்ந்தது தானே அதற்குக் காரணமாக இருக்க முடியும்? அவ்வசனங்களை அவர்கள் ஓதக் கேட்ட போது, அவை தன் விஷயத்தில் கூறப்பட்டதாகக் கருதினார்கள். அல்லாஹ்வினால் வேதனை செய்யப்பட இருக்கும் அந்த நபர் தானாக இருக்க வாய்ப்புள்ளது எனப் பயந்தார்கள். அந்நிலையில், அவர்கள் தனது தவறுகளை நினைத்து வருந்தினார்கள். மற்றவர்களின் தவறுகளில் கவனம் செலுத்தவில்லை.

சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் மிகவும் மேன்மையானவன்; பரிசுத்தமானவன்). ஜமாஅத்தார்களே! இது தான் செய்யிதினா உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் நிலையாக இருந்தது. அவர்கள் சொர்க்கத்தைக் கொண்டு சுபச் செய்தி சொல்லப்பட்டவராக இருந்த போதிலும், ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் பார்வையில் மரியாதைக்குரியவராக இருந்த போதிலும் கூட கர்வம் அல்லது அகந்தை மிக்கவராக இருக்கவில்லை. அல்லாஹ்வின் வேதனையை எடுத்துக் கூறும் அந்த வசனங்களை அவர்கள் கேட்ட போது தனது உள்ளத்தில் பயத்தை உணர்ந்தார்கள். காரணம், அவர்கள் தன்னைப் பற்றியும் தனது பலஹீனத்தைப் பற்றியுமே முதலில் சிந்தித்தார்கள். சொர்க்கத்தைக் கொண்டு வாக்களிக்கப்பட்ட, உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு நபரின் நிலை இது என்றால், அல்லாஹ்வின் சொர்க்கத்தில் இடமுண்டு என உத்தரவாதமளிக்கப்படாத சாதாரண அடியார்களாக நாம் உள்ளோம். எனவே நாம் அல்லாஹ்வின் விஷயத்தில் கர்வம் கொண்டவர்களாக இருப்பது கூடாது.

அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கங்களில் பணிவு (தவாது:) எனும் நற்பண்பை ப்பற்றி ஓரளவு விவாதித்துள்ளோம். நாம் மற்றவர்களுடன் பணிவாக நடந்து கொள்வதுடன், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் விஷயத்தில் பணிவுடன் நடந்து கொள்வது மிகவும் முக்கியமான விஷயமாகும். நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடத்தில் பணிவாக நடந்து கொண்டால், நம்மையும் நமது உள்ளங்களையும் அல்லாஹ்வுக்காகத் தாழ்த்திக் கொண்டால் நாம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மிகச்

சிறந்த அடியார்களாக ஆகுவோம். நமது உள்ளங்களில் அல்லாஹ்வின் மீதான பக்தி அதிகரிக்கும். ரசூலுல்லாஹி(ஸல்) நவின்றுள்ளார்கள்:

مَا نَقَصَتْ صَدَقَةٌ مِنْ مَالٍ وَمَا زَادَ اللَّهُ عَبْدًا بِعَفْوٍ إِلَّا عِزًّا وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلَّا رَفَعَهُ اللَّهُ

பொருள்: தர்மம் செய்வதால் நமது பொருள் குறைந்து விடுவதில்லை. மற்ற அடியாரை நாம் மன்னிப்பதானது அல்லாஹ்வின் பார்வையில் நமது அந்தஸ்த்தை உயர்த்துவதாக உள்ளது. எவர் ஒருவர் அல்லாஹ்வுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறாரோ அவரது அந்தஸ்த்தை அல்லாஹ் உயர்த்துவான். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் முஸ்லிம் ரஹ், இமாம் திர்மிதி ரஹ்)

எனவே, வாழ்க்கையில் நமது இலட்சியங்களை, இலக்குகளை நாம் அடைய முயற்சிக்கும் போது, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவிடம் துஆ (பிரார்த்தனை) செய்வதன் மூலமாக, அவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்பதை நாம் மறந்து விடக் கூடாது. பதவி உயர்வு கிடைக்க வேண்டுமென்பதற்காக கடினமாக உழைக்கின்ற போதும், கல்விக்கூடத்தில் வெற்றியடைய வேண்டுமென்பதற்காக கஷ்டப்பட்டு படிக்கின்ற போதும் அல்லாஹ்வின் உதவியையும் அவனது திருப்தியையும் தேட மறந்து விடக் கூடாது. நாட்களின் இறுதியில் நாம் எவ்வளவு பெரிய வெற்றியை அடைந்த போதிலும் அவ்வெற்றிகளனைத்தும் அல்லாஹ் வழங்கிய

அருட்கள் என அறிய வேண்டும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் "அல்-முஃமின்" எனும் அத்தியாயத்தின் 60-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَقَالَ رَبُّكُمُ ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ إِنَّ الَّذِينَ يَسْتَكْبِرُونَ عَنْ
عِبَادَتِي سَيَدْخُلُونَ جَهَنَّمَ دَاخِرِينَ ٦٠

பொருள்: உங்கள் இறைவன் கூறுகிறான்: "என்னையே நீங்கள் பிரார்த்தியுங்கள்; நான் உங்(கள் பிரார்த்தனை)களுக்கு பதிலளிக்கிறேன்; எவர்கள் என்னை வணங்குவதை விட்டும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் சிறுமையடைந்தவர்களாக நரகத்தில் நுழைவார்கள்."

நான் தற்போது உங்களின் முன்பாக ஓதிக் காட்டிய வசனம், எவர்கள் கர்வம் கொண்டு அல்லாஹ்வை வணங்கி வழிபடாமலிருக்கின்றார்களோ, அல்லாஹ்வுக்குத் தலை வணங்கி, அவனிடம் தம்மை ஒப்படைக்க மறுக்கின்றார்களோ அவர்கள் விஷயத்தில் கூறப்பட்டதாகும். அவர்கள் மறுமையில் வேதனை செய்யப்படுவார்கள்.

மேற்கண்ட வசனத்தில், அல்லாஹ்விடத்தில் துஆ (பிரார்த்தனை) செய்வதையும், அவனை வணங்கி வழிபடுவதையும் சமமாகக் கூறப்பட்டுள்ளதற்கான காரணம், நாம் அல்லாஹ்விடம் உதவி கேட்கும் போது, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அனைத்து வஸ்த்துக்களையும்

தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளான் என்ற உணர்வு நம்மிடம் உண்மையாக ஏற்படுகின்றது. நாம் அல்லாஹ்விடம் உதவி கேட்கும் போது, நாம் பலஹீனமானவர்கள், சிறியவர்கள், சாதாரண மனிதர்கள், அல்லாஹ்வின் அடியார்கள் என்பவற்றை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அல்லாஹ் தான் அனைத்தையும் செய்யும் ஆற்றல் மிக்கவனாக இருக்கின்றான். நமக்கு அவ்வாறான ஆற்றல் இல்லை எனவும் ஒப்புக் கொள்கிறோம்.

அல்லாஹ்விடம் துஆ (பிரார்த்தனை) கேட்காமலிருப்பது ஒரு வகையான கர்வம் ஆகும். காரணம், அந்நிலையில், நாம் அல்லாஹ்வின் வல்லமையை ஏற்றுக் கொள்ளாதவர்களாக ஆகி விடுகிறோம். நாம் அல்லாஹ்விடம் துஆச் செய்யாமலிருப்பதானது, அனைத்தையும் செய்யும் ஆற்றல் நம்மிடம் உள்ளது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா முதற்கொண்டு எவரது உதவியும் நமக்குத் தேவையில்லை என்று நாம் கருதுவது போன்றாகும். துஆச் செய்யாமலிருப்பது அல்லாஹ் விஷயத்தில் நாம் கர்வமாக, அகந்தையுடன் நடப்பதன் அடையாளமாகவும் உள்ளது. ”நவூது பில்லாஹி மின் தாலிக்” (அதிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!)

ஜமாஅத்தார்களே!

அல்லாஹ்வுக்கு எப்போதும் நாம் பணிந்து நடந்து கொள்கிறோம் என்பதை உறுதி செய்ய, நம்மைப் பற்றி நாம் சிந்திக்கவும் (முஹாசபா), நமது பலஹீனங்கள் மற்றும் தவறுகளைப் பற்றிச் சிந்திக்கவும் அடிக்கடி நாம் நேரங்களை ஒதுக்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புத்

தேடுவதை (இஸ்திஃபார்) நாம் மறந்து விடக் கூடாது. உறுதிமிக்க இறை நம்பிக்கை (ஈமான்) கொண்டு, வணக்க வழிபாடுகளைத் தொடர்ந்து புரிந்து வந்த செய்யிதினா உமர் (ரலி) அவர்கள், அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலாவைச் சந்திக்கின்ற போது தனது தலைவிதி எப்படி இருக்குமோ என நினைத்து அழுது புலம்பிய போது, நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் எனச் சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ்வின் விஷயத்தில் பணிவாக நடந்து கொள்ளும் நற்பண்பை நம்மில் நாம் ஏற்படுத்திக் கொள்வதானது, மற்றவர்களிடமும் நாம் பணிவுடன் நடந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். அல்லாஹ்வின் கட்டளைகளின் பிரகாரமும் ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நமக்குப் போதித்துள்ளதன் பிரகாரமும் நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஆற்றலை நாம் பெறுவோமாக! நமது குடும்பத்தார்கள் நற்பண்புகளைப் பற்றிப் பிடிப்பதிலும் நற்காரியங்கள் மற்றும் வணக்க வழிபாட்டுகளை நிறைவேற்றுவதிலும் வெற்றிமிக்க சமுதாயமாக ஆகட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.